Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ்
# மக்கள் குரல்
tamilmakkalkurall@gmail.com
தினசரி காலை நாளிதழ்
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | வியாழன், ஜனவரி 30, 2025 | இதழ் 292

# பிரயாக்ராஜ் கும்பமேளா கூட்ட நெரிசலில் சிக்கி 31 பேர் பலி?

## மீட்பு நடவடிக்கைகளுக்கு பிரதமர் மோடி உத்தரவு



சென்னை, 30 ஜனவரி 2025: உத்தரப் பிரதேச மாநிலம் பிரயாக்ராஜ் கும்பமேளாவில் ஒரே நேரத்தில் பக்தர்கள் புனித நீராட குவிந்ததால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 31 பேர் உயிரிழந்ததாக அஞ்சப்படுகிறது.

உலகின் மிகப்பெரிய ஆன்மிக சங்கமமாக மகா கும்பமேளா திகழ்கிறது. உத்தர பிரதேச மாநிலம், பிரயாக்ராஜில் கடந்த 13- ந் தேதி தொடங்கிய மகா கும்பமேளா அடுத்த மாதம் 26 ந் தேதி வரை 45 நாட்கள் நடைபெற்ற உள்ளது. உலகம் முழுவதும் இருந்து கோடிக்கணக்கான மக்கள் பிரயாக்ராஜில் திரண்டு அங்குள்ள உள்ள திரிவேணி சங்மத்தில் புனித நீராடி வருகின்றனர். நேற்று வரை 16 நாள்களில் 15 கோடிக்கும் அதிகமான பக்தர்கள் புனித நீராடியுள்ளனர்.

தை அமாவாசையான இன்று ஒரே நாளில் 10 கோடி பேர் வரை புனித நீராட வர வாய்ப்புள்ளதால் மகாகும்ப நகரில் வாகனப் போக்குவரத்துக்குத் தடை விதிக்கப்பட்டு, விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது. ஆயிரத்துக்கும் அதிகமான போலீசார் அங்கு குவிக்கப் பட்டுள்ளனர்.

2700 சிசிடிவி கேமராக்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் பொருத்தப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிப்பு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த முக்கியமான நாளில் புனித நீராடுவதற்காக உலகம் முழுவதும் இருந்து பக்தர்கள் அங்குள்ள திரிவேணி சங்கமத்தில் குவிந்தனர்.

இன்று அதிகாலையிலிருந்து ஏராளமான பக்தர்கள் புனித நீராடி வருகின்றனர். கூட்டத்தை கட்டுப்படுத்த ஆங்காங்கே தடுப்புகள் அமைக்கப்பட்டு இருந்தது. இந்த தடுப்புகளை மீறி பக்தர்கள் செல்ல ஆரம்பித்தனர். தடுப்புகள் உடைக்கப்பட்டதால் கூட்டம் அலைமோதியது.

இதனால் கூட்ட நெரிசல் ஏற்பட்டு பக்தர்கள் ஒருவர் மீது ஒருவர் மிதித்துச்செல்லும் நிலை ஏற்பட்டது. இந்த கூட்ட நெரிசலால் பலருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டு மயங்கி விழுந்தனர். இதனால், ஒருவர் மீது ஒருவர் விழுந்துள்ளனர். கூட்ட நெரிசலில் சிக்கியதில் 31 பேர் பலியானதாக அஞ்சப்படுகிறது. மேலும் கூட்ட நெரிசலில் சிக்கி ஏராளமானோர் காயமடைந்ததாகவும், தகவலறிந்து விரைந்து வந்த போலீசார், மீட்புக்குழுவினர் காயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுப்பி வைத்ததாகவும் கூறப்படுகிறது.

பலி எண்ணிக்கை உறுதிப்படுத்தவில்லை. ஆனால் இந்த சம்பவத்தில் 30 பேர் மட்டும் காயமடைந்ததாகவும், காயமடைந்தவர்கள் அனைவரும் பெண்கள் என கூறப்படுகிறது. கூட்ட நெரிசலில் சிக்கிய பக்தர்கள் பலியானது குறித்து எந்த தகவலும் உறுதி செய்யப்படவில்லை. உத்தரபிரதேச அரசும் இது குறித்து எந்த தகவலையும் அதிகாரப்பூர்வமாக வெளியிடவில்லை. 30 பேர் காயமடைந்ததாக மட்டும் தகவல்கள் கூறப்படுகிறது. காயமடைந்தவர்கள் குறித்த விவரம் அறிவிக்கப்படவில்லை.

முதல்வர் யோகி ஆதித்யநாத் - இந்நிலையில், திரிவேணி சங்கமத்தில் பக்தர்கள் நீராட வேண்டாம் என அம்மாநில முதல்-மந்திரி யோகி ஆதித்யநாத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், "பிரயாக்ராஜுக்கு வரும் பக்தர்கள், உங்களுக்கு அருகிலுள்ள கங்கை ஆற்றில் நீராடுங்கள். திரிவேணி சங்கமம் நோக்கிச் செல்ல முயற்சிக்காதீர்கள். நீங்கள் அனைவரும் நிர்வாகத்தின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி ஏற்பாடுகளை செய்வதில் ஒத்துழைக்க வேண்டும். சங்கத்தின் அனைத்து படித்துறைகளிலும் மக்கள் அமைதியாகக் குளித்து வருகின்றனர். எந்த வதந்திகளுக்கும் கவனம் செலுத்த வேண்டாம்" எனப் பதிவிட்டுள்ளார்.

துரித நடவடிக்கை எடுக்க பிரதமர் மோடி உத்தரவு - கூட்ட நெரிசல் குறித்து கேள்விப்பட்டதும் பிரதமர் நரேந்திர மோடி உத்தரப்பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத்தை தொடர்பு கொண்டு நிலவரம் குறித்து கேட்டறிந்தார்.

அதோடு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்கும்படியும், தேவைப்படுபவர்களுக்கு தக்க மருத்துவ உதவிகளை உடனுக்குடன் செய்து கொடுக்கும்படியும், மீட்பு நடவடிக்கைகளை துரிதப்படுத்த கேட்டுக்கொண்டார்.ராகுல் காந்தி

வேதனை - இந்த நிலையில், கும்பமேளாவில் நடந்த துயர சம்பவத்திற்கு எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி வேதனை தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்தியில், “பிரயாக்ராஜ் மகா கும்பமேளா கூட்ட நெரிசலில் சிக்கி பலர் உயிரிழந்த செய்தி மிகவும் வருத்தமளிக்கிறது. தவறான நிர்வாகம், கட்டுப்பாடின்மை மற்றும் சாதாரண பக்தர்களுக்கு பதிலாக விஐபி-களுக்கு சிறப்பு கவனம் ஆகியவை தான் இந்த துயர சம்பவத்துக்கு காரணம்! விஐபி கலாசாரத்தை கட்டுப்படுத்தி, பக்தர்களின் தேவைகளை பூர்த்தி செய்து அரசு சிறந்த ஏற்பாடுகளை செய்து, இது போன்ற துயர சம்பவம் மீண்டும் நடக்காமல் இருக்க அரசு தனது நிர்வாகத் திறனை மேம்படுத்த வேண்டும்” இவ்வாறு தெரிவித்தார்.




# என்.வி.எஸ்-.02 செயற்கைக்கோளுடன் 100வது ராக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி இஸ்ரோ சாதனை



சென்னை, 30 ஜனவரி 2025: இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ இன்று தனது 100வது ராக்கெட்டை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தி சாதனை படைத்துள்ளது.

விண்வெளி துறையில் உலக நாடுகளை திரும்பி பார்க்கும் வகையில் பல்வேறு சாதனைகளை இந்தியா படைத்து வருகிறது. 1975-ஆம் ஆண்டு இந்தியாவின் முதல் செயற்கைக் கோளான "ஆர்யபட்டா" சோவியத் ஒன்றியத்தின் உதவியுடன் விண்ணில் ஏவப்பட்டது. அதன் பிறகு, எஸ்.எல்.வி, ஏ.எஸ்.எல்.வி, பி.எஸ்.எல்.வி., ஜி.எஸ்.எல்.வி, எல்.வி.எம்.-3, எஸ்.எஸ்.எல்.வி. என இந்தியாவின் பல்வேறு கனவுத்திட்டங்களை சுமந்து கொண்டு இந்த ராக்கெட்கள் விண்ணில் சீறிப்பாய்ந்தன.

குறிப்பாக, நிலவை ஆய்வு செய்வதற்கான சந்திரயான்கள், செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்யும் மங்கள்யான், சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா எல்-1 உள்ளிட்ட விண்கலன்கள் உலகின் பார்வையை இஸ்ரோ பக்கம் திருப்பின.

அந்த வகையில் இஸ்ரோவின் 100வது ராக்கெட் இன்று விண்ணில் ஏவப்பட்டது. இன்று காலை 6.23 மணிக்கு ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் 2வது ஏவுதளத்தில் இருந்து என்.வி.எஸ்-02 செயற்கைக்கோளை சுமந்து செல்லும் ஜி.எஸ்.எல்.வி. எப்-15 ராக்கெட் விண்ணில் பாய்ந்தது.

இந்த செயற்கைக் கோளை வடிவமைப்பதற்கு, இந்திய தொழில்துறை நிறுவனங்கள் முக்கிய பங்களிப்பை வழங்கியுள்ளன. இந்த ராக்கெட், ஜி.பி.எஸ்., சேவை அளிப்பதற்கான என்.வி.எஸ்.,01 என்ற செயற்கைக்கோளை விண்ணில் நிலை நிறுத்தியது. 2250 கிலோ எடை கொண்ட இந்த செயற்கைக் கோளின் ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகும். எல் 1, எல் 5, எஸ் பேண்ட் டிரான்ஸ்பான்டர்கள், உள்நாட்டு தொழில்நுட்பத்தில் தயாரான அணு கடிகாரம் உள்பட பல்வேறு அதிநவீன தொழில்நுட்ப கருவிகள் இதில் இடம் பெற்றுள்ளன.

இந்த செயற்கைக்கோள் இந்தியாவின் வழிசெலுத்தல் அமைப்பை மேம்படுத்த உதவும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மேலும் இந்த 2 செயற்கைக்கோள் தரை, கடல் மற்றும் வான்வெளி போக்குவரத்தைக் கண்காணித்து, பேரிடர் காலங்களில் துல்லியத் தகவல்களைத் தெரிவிக்கும் என இஸ்ரோ கூறியுள்ளது.

இஸ்ரோ தலைவர் நாராயணன் - இது குறித்து இஸ்ரோ தலைவர் நாராயணன் கூறுகையில், விக்ரம் சாராபாய் முயற்சியில் தொடங்கப்பட்ட ராக்கெட் கனவு திட்டம் 100ஐ தொட்டுள்ளது.

100 ராக்கெட்கள் மூலம் 548 செயற்கைக்கோள் இதுவரை அனுப்பப்பட்டுள்ளன. இஸ்ரோவின் முயற்சிகளுக்கு மத்திய அரசு தொடர்ந்து ஊக்கமளித்து வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.

# குடியரசு துணைத்தலைவர் சென்னை வருகை



சென்னை, 28 ஜனவரி 2025: குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர், வரும் 31-ம் தேதி சென்னை வருகிறார்.

இந்தப் பயணத்தின்போது, மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் துறையின் கீழ் சென்னையில் இயங்கும் ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம் (திவ்யாங்க்ஜன்) ஏற்பாடு செய்துள்ள கல்வி, அணுகல், நலவாழ்வு குறித்த காது கேளாதோர்-பார்வையற்றோரின் 3-வது தேசிய மாநாட்டில் முதன்மை விருந்தினராகக் குடியரசு துணைத் தலைவர் கலந்து கொள்கிறார்.

# சென்னை அண்ணா சர்வதேச விமான நிலையத்தில் சுங்கத் துறையினர் ரூ.23.5 கோடி மதிப்புள்ள 23.48 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்



சென்னை, 30 ஜனவரி 2025: சென்னை அண்ணா சர்வதேச விமான நிலையத்தில் சுங்கத் துறையினர் ரூ.23.5 கோடி மதிப்புள்ள 23.48 கிலோ கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

அண்ணா சர்வதேச விமான நிலையத்தில் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவல் அடிப்படையில் 26.01.2025 அன்று பாங்காக்கிலிருந்து சென்னை வந்த இந்தியப் பயணிகள் 3 பேரை (ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு ஆண்கள் ஒரு பெண்) இடைமறித்து பரிசோதனை செய்தனர். அவர்களின் உடைமைகளை பரிசோதித்த போது குளிர்பதன செய்யப்பட்ட பழப் பெட்டிகளில் 23.48 கிலோ எடையுள்ள கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டு சுங்கத் துறை அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டது. சட்ட விரோத சந்தையில் இதன் மதிப்பு ரூ.23.5 கோடியாகும். இந்தப் பயணிகள் குற்றவியல் நடுவர் மன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டனர். மேல் விசாரணை நடைபெற்று வருகிறது.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
வியாழன்,
ஜனவரி 30, 2025

# ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் 9எம்-எஃப்ஒய் 2025 க்கு வலுவான செயல்திறனைப் பதிவு செய்துள்ளது!

சென்னை, 30 ஜனவரி 2025: ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸ் நிறுவனம், 2025 ஆம் ஆண்டு 9 மில்லியன் நிதியாண்டில், வரிக்குப் பிந்தைய லாபத்தில் பிஏதி ஆண்டுக்கு ஆண்டு 18.3% வளர்ச்சியைப் பதிவு செய்து 803 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. அதே காலகட்டத்தில், புதிய வணிகத்தின் மதிப்பு (விஎன்பி) 8.5% வளர்ச்சியைப் பதிவு செய்து 1,575 கோடி ரூபாயாகவும், விஎன்பி லாப வரம்பு 22.8% ஆகவும் இருந்தது.

2025 ஆம் ஆண்டு 9 மில்லியன் நிதியாண்டில் மொத்த வருடாந்திர பிரீமியம் சமமான (ஏபிஇ) ஆண்டுக்கு ஆண்டு 27.2% வளர்ச்சியடைந்தது. 2025 ஆம் ஆண்டு 9 மில்லியன் நிதியாண்டில் விற்கப்பட்ட பாலிசிகளின் எண்ணிக்கையில் ஆண்டுக்கு ஆண்டு 14.4% வளர்ச்சியும், 2025 ஆம் ஆண்டு 3 ஆம் ஆண்டு 18.3% வளர்ச்சியும் இதற்குக் காரணம்.

2025 ஆம் ஆண்டு 9 மில்லியன் நிதியாண்டில் ஏபிஇ ஆண்டுக்கு ஆண்டு 81.7% வளர்ச்சியைப் பெற்று 616 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. சில்லறைப் பாதுகாப்பு வணிகம் ஏபிஇ ஆண்டுக்கு ஆண்டு 24.2% அதிகரித்து 9எம்-எஃப்ஒய்2025 இல் 426 கோடியாக உயர்ந்துள்ளது. குறிப்பிடத்தக்க வகையில், சில்லறைப் பிரிவு க்யு3-எஃப்தி2025 இல் 40.0% ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சியடைந்தது. நிறுவனத்தின் சில்லறைப் புதிய வணிக உறுதி செய்யப்பட்ட தொகை (என்பிஎஸ்ஏ) ஆண்டுக்கு ஆண்டு 39.2% அதிகரித்து 9எம்-எஃப்ஒய்2025 இல் 2.28 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. நிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் எடுத்த ஆயுள் காப்பீட்டின் அளவான மொத்த அமலில் உள்ள காப்பீட்டுத் தொகை, ஆண்டுக்கு ஆண்டு 17.0% அதிகரித்து 37.78 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.

நிறுவனம் நன்கு பன்முகப்படுத்தப்பட்ட விநியோக வலையமைப்பைக் கொண்டுள்ளது, இது பல்வேறு வாடிக்கையாளர் பிரிவுகளால் விரும்பப்படும் தளங்கள் மற்றும் தொடர்புப் புள்ளிகளில் அதன் இருப்பை உறுதி செய்கிறது. 9எம்-எஃப்ஒய்2025 இல், ஏஜென்சி, நேரடி, வங்கி காப்பீட்டு நிறுவனம், கூட்டாண்மை விநியோகம் மற்றும் குழு சேனல்களிலிருந்து ஏபிஇ பங்களிப்பு முறையே 30.2%, 15.3%, 27.7%, 10.1% மற்றும் 16.7% ஆக இருந்தது.

நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சொத்துக்கள் டிசம்பர் 31, 2024 அன்று 3.10 லட்சம் கோடி ரூபாயாக இருந்தன. நிறுவனம் வாடிக்கையாளர்களின் நிதிகளின் பாதுகாவலராகவும் அறங்காவலராகவும் செயல்படுகிறது, இது தொடக்கத்திலிருந்தே பூஜ்ஜிய செயல்படாத சொத்துக்கள் என்ற அதன் சாதனைப் பதிவைப் பராமரிக்கும் அதே வேளையில் சிறந்த இடர்-சரிசெய்யப்பட்ட வருமானத்தை வழங்க உதவுகிறது.

டிசம்பர் 31, 2024 அன்று கடன் தீர்வு விகிதம் 211.8% ஆக இருந்தது, இது ஒழுங்குமுறை தேவை 150% ஆகும். காலாண்டில், நிறுவனம் 1,400 கோடி ரூபாய்க்கு மாற்ற முடியாத கடன் பத்திரங்களை வெளியிட்டதன் மூலம் கூடுதல் மூலதனத்தை வெற்றிகரமாக திரட்டியது, இதன் மூலம் அதன் கடன் திறனை மேலும் வலுப்படுத்தியது.

நிலைத்தன்மைக்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பு, வாடிக்கையாளர்களின் பாதுகாப்பு மற்றும் நீண்டகால சேமிப்புத் தேவைகளை உணர்திறன் கொண்டதாக மாற்றும் ஒரு நீடித்த நிறுவனத்தை உருவாக்குவதற்கான அதன் தொலைநோக்குப் பார்வைக்கு மையமானது. இரண்டு முன்னணி இஎஸ்ஜி மதிப்பீட்டு நிறுவனங்களின்படி, நிறுவனம் தொடர்ந்து மிக உயர்ந்த மதிப்பீடு பெற்ற இந்திய காப்பீட்டாளராக உள்ளது. னும்எஸ்சிஐ ஆல் வழங்கப்பட்ட 'ஏஏ' என்ற இஎஸ்ஜி மதிப்பீட்டை இது வெற்றிகரமாகத் தக்கவைத்துக் கொண்டுள்ளது, இது இந்தியாவின் சிறந்த மதிப்பீடு பெற்ற ஆயுள் காப்பீட்டாளர்களில் ஒன்றாகும்.

முடிவுகள் குறித்து கருத்து தெரிவித்த ஐசிஐசிஐ புருடென்ஷியல் லைஃப் இன்சூரன்ஸின் எம்டி & சிஇஓ திரு. அனுப் பாக்சி, "வாடிக்கையாளர் தேவையுடன் ஒத்துப்போவதில் நாங்கள் கவனம் செலுத்துவது, தொடர்ச்சியாக ஐந்து காலாண்டுகளாக தொழில்துறையின் பிரீமியம் வளர்ச்சியை விட சிறப்பாக செயல்பட உதவியது. விற்கப்பட்ட பாலிசிகளின் எண்ணிக்கையில் 14.4% அதிகரிப்பின் பின்னணியில், 9எம்-எஃப்ஒய்2025 இல் ஆண்டுக்கு ஆண்டு 31.4% சில்லறை எடை பெற்ற பிரீமியம் (ஆர்டபிள்யுஆர்பி) வளர்ச்சியை நாங்கள் வழங்கியுள்ளோம். அதே காலகட்டத்தில் எங்கள் விஎன்பி ஆண்டுக்கு ஆண்டு 8.5% அதிகரித்து ரூ. 1,575 கோடியாக உயர்ந்துள்ளது, இது எங்கள் வணிகத்தின் வளர்ந்து வரும் லாபத்தை பிரதிபலிக்கிறது.

எங்கள் வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் எங்கள் தயாரிப்பு தொகுப்பை நாங்கள் தொடர்ந்து புதுமைப்படுத்தி வருகிறோம். பெண்களுக்காக பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஆயுள் காப்பீட்டுத் துறையின் முதல் சுகாதாரத் திட்டமான 'ஐசிஐசிஐ ப்ரு விஷ்' ஐ சமீபத்தில் அறிமுகப்படுத்தினோம். வழக்கமான ஊதிய வருடாந்திரப் பிரிவில் நாங்கள் வழங்கிய மற்றொரு தொழில்துறை-முதல் தயாரிப்பு முன்மொழிவு, 'அதிகரிக்கும் வருமானம்' அம்சத்துடன் வாடிக்கையாளர்கள் பணவீக்கத்தை நிர்வகிக்க உதவுகிறது.

எங்கள் வாடிக்கையாளர் சார்ந்த அணுகுமுறை பாலிசி வாழ்க்கைச் சுழற்சி முழுவதும் எளிமைப்படுத்தப்பட்ட செயல்முறைகளை உருவாக்க எங்களுக்கு உதவியது. 9எம்-எஃப்ஒய்2025 இல் ~90% என்ற எங்கள் 13வது மாத நிலைத்தன்மை விகிதம், நிறுவனம் மீதான வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

9எம்-எஃப்ஒய்2025 இல் 99.3% என்ற எங்கள் உரிமைகோரல் தீர்வு விகிதம், விசாரிக்கப்படாத தனிப்பட்ட உரிமைகோரல்களுக்கு சராசரியாக 1.2 நாட்கள் மட்டுமே திரும்பும் நேரம், எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

வணிக வளர்ச்சி, லாபம் மற்றும் ஆபத்து மற்றும் விவேகத்தை சமநிலைப்படுத்துவதன் மூலம் நிலையான வி என் பி (விஎன்பி) வளர்ச்சியை வழங்குவதே எங்கள்

# என் தோல் சுகபிரிவுக்கு ஏன் வைட்டமின் எஃப் முக்கியமான தோழன்?

சென்னை, 30 ஜனவரி 2025: மீண்டும் மீண்டும் புதிய ஸ்கின் கேர் மூலிகைகள் புழக்கத்துக்கு வரும்போது, ஒரு மறைக்கப்பட்ட நாயகன் தற்போது முன்னணி இடத்தைப் பிடித்துக் கொண்டிருக்கிறது - வைட்டமின் எஃப். புற்றுமூட்டமுள்ள கொழுப்பு அமிலங்கள் கொண்ட இந்த சக்திவாய்ந்த பொருள் ஆரோக்கியமான மற்றும் ஒளிரும் தோலின் அடித்தளம். இது தற்போது பாத்கேர்-இல் அடியிலிருந்து முக்கியத்துவம் பெற்று வருகிறது. இவ் இன்கிரீடியன்ட்ஸ் உங்கள் தோலுக்கு ஆழ்ந்த ஊட்டச்சத்து, தீவிர ஈரப்பதம், மற்றும் ஆரோக்கியமான மின்மினித் தோற்றத்தை அளிக்கிறது.

நீங்கள் உங்கள் குளியல் வழக்கத்தில் இதை ஏன் சேர்க்க வேண்டும் என்பதை பார்க்கலாம்.

வைட்டமின் எஃப் பாரம்பரிய வைட்டமினாக இல்லாமல், முக்கியமான கொழுப்பு அமிலங்கள் (லினோலிக் ஆசிட் - ஒமேகா-6 மற்றும் ஆல்ஃபா லினோலிக் ஆசிட் - ஒமேகா-3) அடங்கியதாகும். உங்கள் உடல் இதை தானாகவே உருவாக்க முடியாது. ஆனால் இது ஆரோக்கியமான மற்றும் உறுதியாகத்




தோலை பராமரிக்க அவசியமானது. வைட்டமின் எஃப் உங்கள் தோல் தடுப்புப் பாகத்தை (ஸ்கின் பேரியர்) பாதுகாத்து, தினசரி

மாசுபாடு, கடுமையான காலநிலை, மற்றும் உலர்வு போன்ற நெருக்கடிகளை சமாளிக்க உதவுகிறது.

குளியல் பராமரிப்பு (பாத்கேர்)-இல் வைட்டமின் எஃப் ஒரு முக்கிய சூப்பர் ஸ்டார்!** இது

உங்கள் தோலை மேம்படுத்துவதோடு, ஈரப்பதத்தை பார்த்துக் கொண்டு, மெல்லிய மற்றும் மென்மையான தோலாக மாற்றுகிறது.

தோலுக்கு வைட்டமின் எஃப் ஏன் தேவை?

1. உங்கள் தோல் தடுப்புப் பாகத்தை (ஸ்கின் பேரியர்) பலப்படுத்துகிறது - தோல் தடுப்புப் பாகம் உங்கள் தோலின் முதலாவது பாதுகாப்புக் கோட்டையாகும். வைட்டமின் எஃப் இந்த தடுப்பை மீட்டமைத்து, ஊட்டச்சத்து அளித்து, உலர்வையும், தூண்டலையும் தடுக்கிறது. குளியலுக்குப் பிறகு உலர்வை விட்டுத், ஈரமூட்டத்துடன் தோலுக்காக இது சிறந்தது.

2. ஈரப்பதத்தை பூட்டுகிறது - லினோலிக் ஆசிட் போன்ற கொழுப்பு அமிலங்கள் ஈரப்பதத்தை தோலுக்குள் பூட்டும் திறன்

கொண்டவை. உங்கள் தோல் பசுமையாகவும் பிம்பமாகவும் நீடிக்க இது உதவுகிறது, குறிப்பாக குளியலுக்கு பிறகு நீண்ட நேரம்.

3. தோலை சாந்தப்படுத்துகிறது மற்றும் குளிர்விக்கிறது

வைட்டமின் எஃப் தணிவூட்டும் (ஆன்டி-இன்ப்ளேமேட்டரி) பண்புகளை கொண்டுள்ளது, அதனால் இது சிகப்பு, தூண்டல், அல்லது மனஅழுத்தத்தில் இருக்கும் தோலுக்கு சிறந்தது. உலர்ந்த அல்லது சிதிலமான தோல் கொண்டவர்களுக்கு, இது நிறைவான சுகத்தை அளிக்கிறது.

4. தோல் அமைப்பை மேம்படுத்துகிறது - வைட்டமின் எஃப்-ஐ தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் தோலின் மென்மையான

அமைப்பு மேம்படுகிறது. பாதிப்பு நேர்ந்த பகுதிகளைச் சரி செய்து, ஈரப்பதம் தருவதன் மூலம் தோல் மிருதுவாகவும் அழகாகவும் மாறுகிறது.

5. தினசரி பயன்பாட்டுக்கு கூற்றது - வைட்டமின் எஃப் தோற்றமளிக்கும் ஊட்டச்சத்து மற்றும் ஈரப்பதத்துடன் உங்கள் குளியல் அனுபவத்தை லக்சூரியஷ் ஆனதாக மாற்றுகிறது. ஒவ்வொரு முறையும் குளிக்கும் போது தோலுக்கு தேவையான எல்லா அன்பையும் அளிக்கிறது - ப்ரொடெக்ஷன், ஹைட்ரேஷன், மற்றும் ஆரோக்கியமான மின்னல் தோற்றத்துடன்.

வைட்டமின் எஃப் என்பது வெறும் தொகுப்பு பொருள் அல்ல; இது தோலின் அடிப்படைப் பராமரிப்பிற்கே அடிப்படையாக அமைகிறது. உங்கள் குளியல் வழக்கத்தில் இதை சேர்ப்பதன் மூலம், உங்கள் தோலுக்கு முழுமையான பாசத்தை அளிக்கிறீர்கள்.

ஆரோக்கியமான, மகிழ்ச்சியான தோல் என்பதே வைட்டமின் எஃப் இன் வாக்குறுதி!

# கேலக்ஸி எஸ்25 என்பது சாம்சங்கின் சிறந்த ஸ்மார்ட்போன், உங்கள் உண்மையான ஏஐ துணை: டி.எம். ரோஹ்

சென்னை, 30 ஜனவரி 2025: கேலக்ஸி எஸ் 25 சாம்சங்கால் தயாரிக்கப்பட்ட சிறந்த தயாரிப்பு என்று நிறுவனத்தின் தலைவரும் மொபைல் அனுபவப் பிரிவின் தலைவருமான டி.எம்.ரோ கூறினார்.

"கேலக்ஸி எஸ் 25 மெலிதான மற்றும் நீடித்த ஸ்மார்ட்போன் ஆகும், இது கேமரா மற்றும் பேட்டரிக்கான வன்பொருளில் நிகரற்ற தலைமையுடன் வருகிறது. இது கேலக்ஸிக்கு மட்டுமே சிறந்த செயல்திறன் கொண்ட தனிப்பயனாக்கப்பட்ட செயலியையும் கொண்டுள்ளது. எங்கள் எஸ் சீரிஸின் ஏற்கனவே சிறந்த கேமரா அனுபவம் கேலக்ஸி ஏஐ உடன் மேலும் ஒன்றிணைக்கப்பட்டு செறிவூட்டப்பட்டுள்ள இதன் விளைவாக ஏஐ இயங்கும் படத் தரம் மற்றும் பட எடிட்டிங் திறன்கள் ளுள்ளன" என்று அவர் மேலும் கூறினார்.

இந்திய நுகர்வோர் புதுமையான அம்சங்களை மிகவும்



வரவேற்கிறார்கள் என்றும், இந்தியாவில் ஏஐ அம்சங்களின் பயன்பாடு உலகளாவிய சராசரியை விட அதிகமாக உள்ளது என்றும் ரோஹ் கூறினார். அதனால்தான் கேலக்ஸி எஸ்25 இல் உள்ள புதிய ஏஐ அம்சங்கள் ஆரம்பத்தில் இருந்தே இந்தி மொழியுடன் முன்னுரிமையுடன் உருவாக்கப்பட்டன.

"கேலக்ஸி எஸ் 25 இல், கூகிள் ஜெமினி லைவ் கொரியன், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் வழங்கப்படும். எனவே கேலக்ஸி எஸ்25 ஜெமினி லைவ் க்காக இந்த மூன்று மொழிகளுடன் தொடங்குகிறோம், பின்னர் மற்ற மொழிகளுக்கும் விரிவுபடுத்துவோம். எனவே மீண்டும், இந்திய சந்தையின் முக்கியத்துவத்தை நீங்கள் காணலாம்" என்று ரோஹ் மேலும் கூறினார்.

சாம்சங் தனிப்பட்ட தகவல் மற்றும் நாக்ஸ் வால்ட் மூலம் பாதுகாப்பான மற்றும் நம்பகமான ஏஐ பயன்பாட்டிற்கான சிறந்த பாதுகாப்பை வழங்குகிறது, இதனால் நுகர்வோர் தங்கள் தனியுரிமையைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை என்று ரோ கூறினார்.

"சாதனம் மற்றும் மேகக்கணியில் ஏஐ தரவு உந்துதல் பயன்பாட்டிற்கான தனியுரிமை பாதுகாப்பை நாங்கள் வழங்குகிறோம், மேலும் பயனர்களுக்கு தேர்வு செய்வது அல்லது விலகுவதற்கான விருப்பத்தையும் வழங்குகிறோம்" என்று அவர் மேலும் கூறினார்.

கேலக்ஸி ஏஐ மேம்பாடு மற்றும் விற்பனை இரண்டிலும் சாம்சங்கிற்கு இந்தியா மிக முக்கியமான நாடு, எப்போதும் எங்கள் முன்னுரிமையாக இருக்கும் என்று ரோ கூறினார்.

இந்தியாவில் கேலக்ஸி எஸ்25 அல்ட்ரா, கேலக்ஸி எஸ்25+ மற்றும் கேலக்ஸி எஸ்25 ஆகியவற்றை நுகர்வோர் முன்கூட்டியே ஆர்டர் செய்யலாம் என்று சாம்சங் சமீபத்தில் அறிவித்தது. கேலக்ஸி எஸ் 25 சீரிஸ் ரூ .80,999 இல் தொடங்கி 12 ஜிபி ரேம் மற்றும் 1 டிபி மெமரியுடன் வரும் டாப் அல்ட்ரா மாடலுக்கு ரூ.1.65 லட்சம் வரை செல்கிறது. கேலக்ஸி எஸ் 25 அல்ட்ராவை முன்கூட்டியே ஆர்டர் செய்யும் நுகர்வோர் ரூ .21,000 மதிப்புள்ள நன்மைகளைப் பெறலாம் என்று நிறுவனம் தெரிவித்துள்ளது. இந்தியாவில் விற்பனை செய்யப்படும் கேலக்ஸி எஸ் 25 சீரிஸ் ஸ்மார்ட்போன்கள் நொய்டாவில் உள்ள சாம்சங் ஸ்மார்ட்போன் தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன.

# பழைய வண்ணாரப்பேட்டை பகுதியில் பாலியல் தொழில் நடத்திய பெண் கைது. 2 பெண்கள் மீட்பு.

சென்னை, 30 ஜனவரி 2025: சென்னை பெருநகர காவல், விபச்சார தடுப்புப் பிரிவு-2 (இம்மாரல் டிராஃப்பிக் பிரீவென்சன் யூனிட், ஐதிபியு-2) காவல் ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், காவல் குழுவினர்

27.01.2025 அன்று பழைய வண்ணாரப்பேட்டை, சஞ்சீவிராயன் ஞோயில் தெருவில் உள்ள ஒரு வீட்டை கண்காணித்தபோது, அங்கு பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்தியது உறுதி செய்யப்பட்டது.

அதன் பேரில், பெண் காவலர்கள் உள்ளிட்ட காவல் குழுவினர் மேற்படி இடத்தில் சோதனைகள் மேற்கொண்டு, அங்கு பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்திய கலைவாணி, வ/29, த/பெ.சுப்பிரமணியம், வெங்கடாச்சலம் தெரு, பழைய வண்ணாரப் பேட்டை, சென்னை என்பவரை கைது செய்தனர். அவரிடமிருந்து 1 செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. மேற்படி இடத்தில் பாலியல் தொழிலில் ஈடுபடுத்த தங்க வைத்திருந்த 2 பெண்கள் மீட்கப்பட்டனர்.

மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்டு தலைமறைவாக உள்ள மற்றொரு குற்றவாளியை போலீசார் தீவிரமாக தேடிவருகின்றனர். கைது செய்யப்பட்ட எதிரி கலைவாணி விசாரணைக்குப் பின்னர் 28.01.2025 அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப் படவுள்ளார்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# இந்திய கால்பந்தாட்டத்தில் நிலைமாற்றத்தைக் கொண்டு வரும் தரவு நுண்ணறிவு! டிஎஃப்பி மற்றும் திசிஜி டிஜிட்டலுக்கு இடையே முக்கிய ஒத்துழைப்பு



சென்னை, 30 ஜனவரி 2025: இந்திய கால்பந்தாட்டத்திற்கு ஆட்டத்தையே மாற்றும் ஒரு நிகழ்வாக இந்நாட்டில் விளையாட்டு சூழலமைப்பில் நிலைமாற்றத்தை உருவாக்க தரவு நுண்ணறிவின் (டேட்டா இண்டலிஜென்ஸ்) தயாராக இருக்கிறது. ஜெர்மனியில் கால்பந்தாட்டத்தின் நிர்வாக அமைப்பான ஜெர்மன் கால்பந்தாட்ட சங்கம் (டிஎஃப்பி) மற்றும் உலகளாவிய தொழில்நுட்ப முன்னோடிகளான திசிஜி டிஜிட்டலுக்கும் இடையேயான ஒரு உத்திவாய்ந்த கூட்டாண்மையிருந்து இந்த முன்னெடுப்பு திட்டம் உருவாகிறது.

நேரலையாக பல்வேறு மொழிகளில் மொழியாக்கம் செய்யப்படும் விளையாட்டு நிகழ்வின் வர்ணனைகளை உள்ளடக்கிய இந்த புத்தாக்கம் விரைவில் அறிமுகம் செய்யப்படவிருக்கிறது. கால்பந்தாட்ட விளையாட்டை பார்க்கும் அனுபவத்தை இன்னும் மேம்படுத்தி கால்பந்தாட்ட ஆர்வலர்களுக்கு வழங்கும். விரைவிலேயே, செயற்கை நுண்ணறிவால் உதவப்படும் நேரலை வர்ணனையை பிராந்திய மொழிகளில் கேட்க முடியுமென்பதால் இந்திய கால்பந்தாட்ட இரசிகர்கள் இதே போன்ற அனுபவத்தை பெற்று மகிழலாம். டிஎஃப்பி மற்றும் திசிஜி டிஜிட்டலின் கூட்டு அறிவிப்பின்படி இத்தொழில்நுட்பமானது இந்தியாவில் வரவிருக்கும் மாதங்களில் அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது. பல்வேறு மொழிகளை பேசும் பார்வையாளர்களுக்கும் கால்பந்தாட்ட இரசிகர்களுக்கும் இவ்விளையாட்டை இன்னும் அதிக ஈடுபாடுள்ளதாக மாற்றுவதில் இது ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் நிகழ்வாக இருக்கும்.

ஜெர்மனியின் ஃபிராங்க்பர்ட் நகரில் டிஎஃப்பி தலைமையகத்தில் இந்த ஒத்துழைப்பு கூட்டு முயற்சி குறித்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. இதில் டிஎஃப்பி-ன் ஊடக உரிமைகள் துறை இயக்குநர் கேடாம் ஹோல்ஸ், இந்தியா ஃபுட்பால் சென்டரின் நிறுவனர் திரு. கௌசிக் மௌலிக், திசிஜி டிஜிட்டலின் தலைமை செயலாக்க அதிகாரி திரு. தேப்தாஸ் சென், திசிஜி டிஜிட்டலின் உலகளாவிய சந்தையாக்கல் துறையின் தலைவர் கேயா சாட்டர்ஜி ஆகியோர் பங்கேற்றனர். இந்நிகழ்வில் முக்கிய ஆளுமைகளான ஃபேபியன் வீட் (சர்வதேச தலைவர் - திஎஸ்ஜி ஹோஃபென்ஹெய்ம்), ஜான் மேயர் (திஎஸ்ஜி ஹோஃபென்ஹெய்ம்-ன் தலைமை செயல் அதிகாரி - புத்தாக்கம்), திரு. நவாஸ் மீரான் (தலைவர் - கேரளா கால்பந்தாட்ட சேர்மன்), பூயட்மார் பெயர்ஸ்டோர்ஃபர் (எஃப்சி இங்கோல்ஸ்டாட்-ன் தலைமை செயலாக்க அதிகாரி), ஜெர்ஹார்ட் ரீடில் (நிறுவனர் - இந்தியன் ஃபுட்பால் சென்டர், ஆஸ்திரேலியா) மற்றும் ஜெர்மனியிலுள்ள இந்திய சமூகத்தின் முக்கிய பிரதிநிதிகள் முன்னிலை வகித்தனர்.

இந்த கூட்டாண்மை என்பது இரஷ்யர்களின் அனுபவத்தையும் மற்றும் பார்வையாளர்களின் எண்ணிக்கையையும் அதிகரிப்பது என்பதையும் கடந்ததாகும். பயிற்சி அமர்வுகள், இளைஞர்களுக்கான போட்டிகள் மற்றும் கீழ்மட்ட அளவிலான விளையாட்டுகள் உட்பட அடிப்படை நிலைகளிலிருந்து இளம் திறமைசாலிகளை அடையாளம் காண்பதற்காக செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் வீடியோ அனாலிடிக்ஸ் பயன்படுத்தப்படும்.

அதிக நம்பிக்கை தருகிற திறமையான விளையாட்டு வீரர்களை அடையாளம் கண்டு வளர்த்தெடுப்பதன் மூலம் உலகளாவிய கால்பந்தாட்ட தளத்தில் இந்தியாவின் செயலிருப்பை மேம்படுத்தி வலுப்படுத்துவது இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும்.

டிஎஃப்பி-ன் ஊடக உரிமைகள் துறை இயக்குநர் கேடாம் ஹோல்ஸ், புத்தாக்கத்தின் மீதான அர்ப்பணிப்பை வலியுறுத்தி கூறியதாவது: “உலகமே பெரிதும் நேசிக்கிற இந்த விளையாட்டை இன்னும் மேம்படுத்துவதற்கு நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது ஜெர்மன் கால்பந்தாட்ட சங்கத்தின் விருப்பமாகவும், பொறுப்பாகவும் இருக்கிறது. தொழில்நுட்பத்தின் மூலம் கால்பந்தாட்டத்தை இன்னும் சிறப்பானதாக ஆக்கி வாடிக்கையாளர்கள் அனுபவத்தை மேம்படுத்த முடியுமென்று ூாங்கள் கருதுகிறோம். தரவு திருட்டை எதிர்த்து போரிடுகின்ற அதே நேரத்தில் தானியக்க செயல்பாடாக பல்வேறு மொழிகளில் விளையாட்டு போட்டிகளின் வர்ணனையை ஏதுவாக்குவது வரை நாங்கள் ஆராய்வதற்கு எண்ணற்ற வாய்ப்புகளும், வழிமுறைகளும் இருக்கின்றன”.

திசிஜி டிஜிட்டல் தலைமை செயலாக்க அதிகாரி திரு. தேப்தாஸ் சென், விளையாட்டுகளில் தரவு மற்றும் செயற்கை நுண்ணறிவின் திறன் சாத்தியம் குறித்து பேசுகையில், “திசிஜி டிஜிட்டலில் எமது செயல்தளமான எம்க்யூப் வழியாக செயற்கை நுண்ணறிவின் வரம்பெல்லைகளை நாங்கள் நகர்த்திக் கொண்டேயிருக்கிறோம். உலகின் மிகப்பெரிய கால்பந்தாட்ட சங்கத்துடன் கூட்டாக இணைந்து செயல்படுவதன் மூலம் நுட்பமான பல சவால்களை எதிர்கொள்கிற தீர்வுகளின் மூலம் கால்பந்தாட்டத்தில் நிலைமாற்றத்தைக் கொண்டு வருவது எமது நோக்கமாகும்.

நாங்கள் இருவரும் ஒருங்கிணைந்து, விளையாட்டு வீரர்களுக்கும், இரசிகர்களுக்கும் மற்றும் விரிவான சூழலமைப்பிற்கும் கால்பந்தாட்டத்தை இன்னும் சிறப்பானதாக ஆக்குவதற்கு படைப்பூட்டத்திறன், புதுமை கண்டுபிடிப்புகள் மற்றும் தொழில்நுட்பத்தை கலந்து பயன்படுத்துவோம்” என்று குறிப்பிட்டார்.

இக்கூட்டாண்மையின் காரணமாக இந்திய கால்பந்தாட்ட இரசிகர்களும் மற்றும் விளையாட்டு ஊடகவியலாளர்களும் மிகப்பெரிய அளவில் பலன் பெறவிருக்கின்றனர். தரவு நுண்ணறிவும், செயற்கை நுண்ணறிவும் மிக எளிதாக போட்டியின் புய்ளி விவரங்களை வழங்கும்; ஆழமான பகுப்பாய்வை ஏதுவாக்கி விளையாட்டை பின்பற்றுவதை மிக எளிதான செயல்பாடாக மாற்றும். செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் தரவு பெட்டகம் குறித்த பணிகளும் நடைபெற்று வருகின்றன.

பயிற்சி குறித்த வீடியோ பதிவுகள், நேர்காணல்கள், ஊடகவியலாளர்களுடன் சந்திப்புகள் மற்றும் கீழ்பட்ட நிலை போட்டிகளின் பதிவுகள் ஆகியவற்றிற்கான அணுகுவசதியை கேட்டவுடன் வழங்குவதன் மூலம் இந்த விளையாட்டு குறித்த தகவலை மேலும் ஜனநாயகப் படுத்துவதற்கு இத்தரவு பெட்டகம் உதவும். இரசிகர்களது ஆர்வமிக்க ஈடுபாட்டை மேம்படுத்துவதற்கும் கூடுதலாக, விளையாட்டு மைதானத்திற்கு வெளியே நியாயமான, நடுநிலையான விளையாட்டை இக்கூட்டாண்மை ஊக்குவிக்கும். இந்த விளையாட்டின் வளர்ந்து வரும் பிரபல்யத்தினால் தொடர்புடைய அக்கறை பங்காளர்கள் பலன் பெறுவதை உறுதி செய்யும் வகையில் கால்பந்தாட்ட நிகழ்வின் ளுள்ளடகத்தின் ஒருமைப்பாட்டை மேம்படுத்தப்பட்ட திருட்டை தடுப்பதற்கான நடவடிக்கைகள் பாதுகாக்கும்.

விளையாட்டு போட்டிகளின் போது இரசிகர்களது உணர்வுகளை படம் பிடிப்பது, செயற்கை நுண்ணறிவால் முன்னெடுக்கப்படும் முக்கிய தருணங்களை (ஹைலைட்ஸ்) அறிமுகம் செய்வது போன்ற புதிய அம்சங்களின் மூலம் இவ்விளையாட்டை இதற்கு முன்பு இருந்ததைவிட இன்னும் அதிக ஈர்ப்புள்ளதாக இக்கூட்டாண்மை ஆக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.


# இந்தியன் வங்கி 2024 டிசம்பர் 31 அன்று முடிவடைந்த காலாண்டு / ஒன்பது மாதங்கள் கால அளவிற்கான நிதிசார் முடிவுகள்



சென்னை, 30 ஜனவரி 2025: முக்கிய சிறப்பம்சங்கள் (டிசம்பர்’23 மற்றும் டிசம்பர்’24-ல் முடிவடைந்த காலாண்டுகளில் செயல்பாட்டின் மீதான ஒப்பீடு) நிகர இலாபம், டிசம்பர்’23-ல் பதிவான ரூ 2119 கோடி என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் ரூ 2852 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 35% வளர்ச்சி கண்டிருக்கிறது செயல்பாட்டு இலாபம், டிசம்பர்’23-ல் பதிவான ரூ 4097 கோடி என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் ரூ 4749 கோடியாக 16% அதிகரித்திருக்கிறது. நிகர வட்டி வருவாய், டிசம்பர்’23-ல் பதிவான ரூ 5815 கோடி என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் ரூ 6415 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 10% அதிகரித்திருக்கிறது. கட்டணம் சார்ந்த வருவாய், டிசம்பர்’23-ல் பதிவான ரூ 852 கோடி என்பதிலிருந்து 9% வளர்ச்சி கண்டு டிசம்பர்’24-ல் ரூ 931 கோடியாக உயர்ந்திருக்கிறது. சொத்துக்கள் மீதான இலாபமீட்டல் நிலை (ஆர்ஓஏ), டிசம்பர்’23-ல் இருந்த 1.11% என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் 28 பிபிஎஸ் உயர்ந்து 1.39% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது. பங்குகள் மீதான இலாபமீட்டல் நிலை (ஆர்ஓஇ), டிசம்பர்’23-ல் இருந்த 19.92% என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் 108 பிபிஎஸ் மேம்பட்டு 21.00% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது. கடன்கள் மீதான வருவாய் (ஒய்ஓஏ), டிசம்பர்’23-ல் இருந்த 8.78% என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் 14 பிபிஎஸ் உயர்ந்து 8.92% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது. முதலீடுகள் மீதான வருவாய் (ஒய்ஓஐ), டிசம்பர்’23-ல் இருந்த 6.80% என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் 32 பிபிஎஸ் உயர்ந்து 7.12% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது. வருவாய்க்கான செலவு விகிதம் டிசம்பர்’23-ல் 46.90% என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் 234 பிபிஎஸ் குறைந்து 44.56% ஆக பதிவாகி யிருக்கிறது. மொத்த கடன்கள், டிசம்பர்’23-ல் பதிவான ரூ 509800 கோடி என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் 10% வளர்ச்சி பெற்று ரூ559199 கோடியாக அதிகரித்திருக்கிறது ஆர்ஏஎம் துறைக்கு (ரீடெய்ல், விவசாயம் மற்றும் எம்எஸ்எம்இ) வழங்கப்பட்ட கடன்கள் டிசம்பர்’23-ல் இருந்த ரூ296845 கோடி என்ற அளவிலிருந்து டிசம்பர்’24-ல் ரூ334739 கோடியாக உயர்ந்து 13% வளர்ச்சியை பதிவுசெய்திருக்கிறது. மொத்த உள்நாட்டு கடன்களுக்கு ஆர்ஏஎம்-ன் பங்களிப்பு 64.35% ஆக இருக்கிறது. ரீடெய்ல், விவசாயம், எம்எஸ்எம்இ (ஆர்ஏஎம்) ஆகிய பிரிவுகளுக்கான கடன்கள் முந்தைய ஆண்டைவிட முறையே 16%, 13.5% மற்றும் 8% என அதிகரித்திருக்கின்றன. முந்தைய ஆண்டைவிட வீட்டுக்கடன் (அடமானம் உட்பட) 12% அதிகரித்திருக்கிறது. முன்னுரிமை துறைக்கான கடன் வழங்கல் டிசம்பர்’24-ல் ஒழுங்குமுறை தேவைப்பாடான 40%-க்கு எதிராக ஏஎன்பிசி-யின் ஒரு சதவீதமாக 43.85% (ரூ192761 கோடி) ஆக பதிவாகியிருக்கிறது மொத்த டெபாசிட்கள் டிசம்பர்’23-ல் பதிவான ரூ 654154 கோடிக்கு மாறாக 7% வளர்ச்சி கண்டு டிசம்பர்’24-ல் ரூ 702282 கோடி என்ற அளவை எட்டியிருக்கிறது.

முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் நடப்பு, சேமிப்பு சிஏஎஸ்ஏ டெபாசிட்டுகள் முறையே 5%, 3.5% மற்றும் 4% என அதிகரித்திருக்கின்றன. உள்நாட்டு சிஏஎஸ்ஏ விகிதம் 40% என 31 டிசம்பர் 24-ல் பதிவாகியிருக்கிறது. 31 டிசம்பர் 24-ல் சிடி விகிதம் 79.63% ஆக இருக்கிறது ஜிஎன்பிஏ (மொத்த வாராக்கடன்கள்) டிசம்பர்’23-ல் இருந்த 4.47% லிருந்து முந்தைய ஆண்டோடு ஒப்பிடுகையில் 121 பிபிஎஸ் குறைந்து 3.26% ஆக பதிவாகியிருக்கிறது. என்என்பிஏ (நிகர வாராக்கடன்கள்) டிசம்பர்’23-ல் இருந்த 0.53% லிருந்து டிசம்பர்’24-ல் 32 பிபிஎஸ் குறைந்து 0.21% ஆக பதிவாகியிருக்கிறது. வாராஐயக்கடன்களுக்கான (பிசிஆர்) நிதி ஒதுக்கீட்டு விகிதம் (இரண்டு - தொழில்நுட்ப கடன் தள்ளுபடி உட்பட, பிசிஆர்), டிசம்பர்’23-ல் பதிவான 95.90% என்பதிலிருந்து 219 பிபிஎஸ் அதிகரித்து டிசம்பர்’24-ல் 98.09% ஆக பதிவாகியிருக்கிறது. நழுவல் விகிதம், டிசம்பர்’23-ல் 1.28% என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் 50 பிபிஎஸ் முன்னேற்றம் கண்டு 0.78% ஆக இருக்கிறது. மூலதன போதுமான நிலை விகிதம் 34 பிபிஎஸ் முன்னேற்றம் கண்டு 15.92% ஆக உயர்ந்திருக்கிறது மற்றும் சிஇடி-ஐ, முந்தைய ஆண்டைவிட 91 பிபிஎஸ் உயர்ந்து 13.27% ஆக பதிவாகியிருக்கிறது மற்றும் அடுக்கு மி மூலதனம் 89 பிலீஎஸ் வளர்ச்சி கண்டு 13.77% பதிவாகியிருக்கிறது ஒரு பங்கிற்கான வருவாய் (இபிஎஸ்) டிசம்பர்’23-ல் பதிவான ரூ 67.12 என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் 26% அதிகரித்து ரூ84.70 ஆக பதிவாகியிருக்கிறது. நிகர இலாபம், செப்டம்பர்’24-ல் பதிவான ரூ 2707 கோடி என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் ரூ 2852 கோடியாக, முந்தைய காலாண்டைவிட 5% வளர்ச்சி கண்டிருக்கிறது சொத்துக்கள் மீதான இலாபமீட்டல் நிலை (ஆர்ஓஏ), செப்டம்பர்’24-ல் இருந்த 1.33% என்பதிலிருந்து 6 பிலீஸ் உயர்ந்து டிசம்பர்’24-ல் 1.39% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது கடன்கள் மீதான வருவாய் (ஒய்ஓஏ), செப்டம்பர்’24-ல் இருந்த 8.77% என்பதிலிருந்து டிசம்பர்’24-ல் 15 பிலீஸ் உயர்ந்து 8.92% ஆக வளர்ச்சி கண்டிருக்கிறது உள்நாட்டளவில் நிகர வட்டி விளிம்பு (என்ஐஎம்), செப்டம்பர்’24-ல் பதிவான 3.49% லிருந்து 8 பிபிஎஸ் உயர்ந்து டிசம்பர்’24-ல் 3.57% ஆக பதிவாகியிருக்கிறது ஜிஎன்பிஏ (மொத்த வாராக்கடன்கள்) செப்டம்பர்’24-ல் 3.48% லிருந்து 22 பிபிஎஸ் குறைந்து டிசம்பர்’24-ல் 3.26% ஆக பதிவாகியிருக்கிறது, என்என்பிஏ (நிகர வாராக்கடன்கள்) செப்டம்பர்’24-ல் பதிவான 0.27% லிருந்து டிசம்பர்’24-ல் 6 பிபிஎஸ் குறைந்து 0.21% ஆக பதிவாகியிருக்கிறது நழுவல் விகிதம், செப்டம்பர்’24-ல் 1.06% லிருந்து டிசம்பர்’24-ல் 0.78% ஆக குறைந்திருக்கிறது. கடன்கள் மீதான செலவு, செப்டம்பர்’24-ல் பதிவான 0.65% லிருந்து டிசம்பர்’24-ல் 18 பிபிஎஸ் குறைந்து 0.47% ஆக பதிவாகியிருக்கிறது. நிகர இலாபம், நிதியாண்டு’24-ன் 9 மாத காலஅளவில் பதிவான ரூ5816 கோடி என்பதிலிருந்து நியீயாண்டு’25-ன் 9 மாத காலஅளவில் ரூ7962 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 37% வளர்ச்சி கண்டிருக்கிறது செயல்பாட்டு இலாபம், நிதியாண்டு’24-ன் 9 மாத காலஅளவில் பதிவான ரூ 12535 கோடி என்பதிலிருந்து நிதியாண்டு’25-ன் 9 மாத காலஅளவில் ரூ 13980 கோடியாக 11.5% அதிகரித்திருக்கிறது. நிகர வட்டி வருவாய், நிதியாண்டு’24-ன் 9 மாத காலஅளவில் பதிவான ரூ 17258 கோடி என்பதிலிருந்து நிதியாண்டு’25-ன் 9 மாத காலஅளவில் ரூ 18787 கோடியாக, முந்தைய ஆண்டைவிட 9% அதிகரித்திருக்கிறது.

# திருவல்லிக்கேணி பகுதியில் மெத்தம்பெட்டமைன் போதைப்பொருள் வைத்திருந்த நபர் கைது. 10 கிராம் மெத்தம்பெட்டமைன் பறிமுதல்.



சென்னை, 30 ஜனவரி 2025: டி-1 திருவல்லிக்கேணி காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான தனிப்படை போலீசாருக்கு கிடைத்த ரகசிய தகவலின்பேரில், தனிப்படை போலீசார் 27.01.2025 அன்று சிவானந்தா சாலை, தூர்தர்ஷன் அலுவலகம் அருகே கண்காணித்து அங்கு மெத்தம்பெட்டமைன் என்ற போதைப்பொருள் வைத்திருந்த முகமது அல்தாப், வ/27, த/பெ.சீனிமுகமது, ஏர்வாடி, இராமநாதபுரம் மாவட்டம் என்பவரை கைது செய்தனர்.

அவரிடமிருந்து மொத்தம் 10 கிராம் எடை கொண்ட மெத்தம்பெட்டமைன், 6 சிரிஞ்சுகள் மற்றும் 1 எடை மெஷின் பறிமுதல் செய்யப்பட்டது.

கைது செய்யப்பட்ட எதிரி முகமது அல்தாப் விசாரணைக்குப் பின்னர் 28.01.2025 அன்று சிதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுள்ளார்.

# கல்யாண் ஜூவல்லர்ஸின் இரண்டு புதிய விற்பனை நிலையங்களை சென்னையில் கூடுவாஞ்சேரி மற்றும் புரசைவாக்கத்தில் நடிகர் பிரபு திறந்து வைத்தார்!

சென்னை, 30 ஜனவரி 2025: இந்தியாவின் முன்னணி நகை பிராண்டும், மக்களிடம் பெரும் நம்பகத்தன்மையைப் பெற்றதுமான கல்யாண் ஜூவல்லர்ஸ், சென்னையின் கூடுவாஞ்சேரியின் ஜிஎஸ்டி சாலையிலும், புரசைவாக்கத்தின் மில்லர்ஸ் சாலையிலும் தனது இரண்டு புதிய ஷோரூம்களைத் திறந்துள்ளது. கல்யாண் ஜூவல்லர்ஸ் லைஃப் ஸ்டைல் ப்ராண்டான கேன்டிரியின் விற்பனை நிலையமும் கூடுவாஞ்சேரி விற்பனை நிலையத்துடன் சேர்ந்து இன்று திறக்கப்பட்டது. கல்யாண் ஜூவல்லர்ஸின் விளம்பரத் தூதரும் நடிகருமான பிரபு கணேசன் இந்தப் புதிய ஷோரூம்களைத் திறந்துவைத்தார். வாடிக்கையாளருக்கான சேவைகளுடன் விதவிதமான வடிவமைப்புகள் கூடிய நிறைவான ஷாப்பிங் அனுபவத்தை கல்யாண் ஜூவல்லர்ஸ், கேண்டியர் இரண்டும் வழங்கும். ரசிகர்களும் வாடிக்கையாளர்கள் பெருவாரியாக இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.



கல்யாண் ஜூவல்லர்ஸ் பிராண்டின் விளம்பரத் தூதுவரும் நடிகருமான பிரபு பேசும்போது, “சென்னையில் கல்யாண் ஜூவல்லர்ஸின் இரண்டு புதிய விற்பனை நிலையங்களை இன்று திறப்பதில் அளப்பறிய மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைகிறேன். கல்யாண் ஜூவல்லர்ஸுடனான என்னுடைய கூட்டுறவு ஆரம்பத்திலிருந்து உள்ளது. எங்களது இந்த உறவு தொடங்கி இன்றுவரை அவர்களது குறிப்பிடத்தகுந்த வளர்ச்சிப் பயணத்தைத் தொடர்ந்து பார்த்துவருகிறேன். நம்பிக்கை, வெளிப்படைத் தன்மை, வாடிக்கையாளர் திருப்தி தொடர்பான அவர்களது அர்ப்பணிப்பில் மற்ற எல்லாரையும் விடத் தனித்து உயரத்தில் நிற்கிறார்கள். எங்களது வாடிக்கையாளர்கள் தொடர்ந்து கல்யாண் ஜூவல்லர்ஸுக்கு தங்கள் ஆதரவைத் தருவார்கள் என்பதில் எனக்கு நம்பிக்கை உள்ளது. கல்யாண் ஜூவல்லர்ஸ் செய்யும் ஒவ்வொரு நகையிலும் இருக்கும் அர்த்தம், அற்புதத்தை வாடிக்கையாளர்கள் தொடர்ந்து கொண்டாடுகின்றனர்.

ஞூல்யாண் ஜூவல்லர்ஸின் செயல் இயக்குனர் திரு. ரமேஷ் கல்யாணராமன் [எக்ஸிகியூட்டிவ் டேரக்டர் ஆஃப் கல்யாண் ஜூவல்லர்ஸ்] பேசும்போது, “ஒரு நிறுவனமாக, வாடிக்கையாளர்களின் நகை வாங்கும் அனுபவத்தை மேம்படுத்தி ஒரு முழுமையான ஷாப்பிங் அனுபவத்தை உருவாக்குவதில் பெரிய முயற்சிகளை எடுத்து மகத்தான மைல்கற்களை எட்டியுள்ளோம். நம்பிக்கை மற்றும் வெளிப்படைத் தன்மையே எங்கள் பிராண்டின் அடிப்படை தத்துவமாக இருந்து வருகின்றன. அதை எதற்காகவும் விட்டு கொடுக்காமல் நாங்கள் தொடர்ந்து முன்னேறி வருகிறோம். கல்யாண் ஜூவல்லர்ஸில் நுட்பமும் தனித்துவமும் கூடிய நகை வடிவமைப்புகளை தரம், இணையற்ற சேவை உறுதிப்பாடுடன் தொடர்ந்து தந்துவருவோம் என்று உறுதி கூறுகிறோம்.”

கல்யாண் ஜூவல்லர்ஸ் கடையில் கிடைக்கும் சில்லறை நகைகள் அனைத்து பிஐஎஸ் ஹால்மார்க் முத்திரை பெற்றவை. அத்துடன் தூய்மைக்கான பல சுற்றுப் பரிசோதனைகளுக்கும் உட்பட்டவை. எங்களிடம் நகை வாங்கும் வாடிக்கையாளர்களுக்கு கல்யாண் ஜூவல்லர்ஸ் 4 மட்ட உத்திரவாதச் சான்றிதழ் தரப்படுகிறது. மேலும், நகைகளுக்கு ஆயுள்கால பராமரிப்பு இலவசம். அத்துடன் எங்கள் தயாரிப்புகள் குறித்த அனைத்து விவரங்களையும் தருகிறோம். வாங்கிய நகைகளை எக்ஸேஞ்ச் மற்றும் விற்பனை செய்வதற்கும் வெளிப்படையாக விவரங்கள் சொல்கிறோம். எங்கள் மீது நம்பிக்கை கொண்ட வாடிக்கையளர்களுக்கு மிகத் தரமானதை தரும் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதே கல்யாண் ஜூவல்லர்ஸின் 4 மட்ட உத்தரவாதச் சான்றிதழ். கல்யாண் ஜூவல்லர்ஸின் எல்லா புதிய ஷோரூம்களும் முஹூரத் என்றழைக்கப்படும் மணப்பெண் நகைகளை இந்தியா முழுவதும் விற்பனைக்கு காட்சிப்படுத்தியுள்ளன. கல்யாண் ஜூவல்லர்ஸின் புகழ்பெற்ற பிராண்டுகளான, தேஜஸ்வி (போல்கி நகைகள்), முத்ரா (புராதன கைவினை நகைகள்), நிமாஹ் (கோயில் நகைகள்), க்ளோ (டான்சிங் டயமண்ட்கள்), ஜியா (டயமண்ட் ஜூவல்லரி), அனோகி (அன்கட் நகைகள்) அபூர்வா (சிறப்புத் தருணங்களுக்கான வைரங்கள்), அந்தரா (திருமண வைரங்கள்), ஹெரா (தினசரி அணியும் வைரங்கள்), ரங்க் (அபூர்வ கற்கள் பதித்த நகைகள்) மற்றும் லீலா (வண்ணக் கற்கள் மற்றும் வைரக் கல் நகைகள்) ஆகிய ஆபரணத் தொகுப்புகளும் இதில் அடங்கும்.

# சிங்கப்பூர்உயர்நீதிமன்றம் ஷெட்டாய் க்கு அதன் நிறுவன மறுசீரமைப்பு திட்டத்தை முதலீட்டாளர்களுக்கு முன் வமாழிய அனுமதி அளித்துள்ளது, இது வசிர் எக்ஸ் இன் மறுசீரமைப்புக்கான பாதையை அளிக்கிறது.

சென்னை, 30 ஜனவரி 2025: ஒரு குறிப்பிடத்தக்க முன்னனற்றமாக, சிங்கப்பூர் உயர்நீதிமன்றம் ஷெட்டாய் பியீஇ லிமிடெட் நிறுவனத்திற்கு ஆதரவாக தீர்ப்பளித்துள்ளது, இதன் மூலம் அந்த நிறுவனம் கிரிப்னடாகரன் சி பரிமாற்ற நிலலயமான வசிர் எக்ஸ் இன் பயனர்களுடன், ஒரு திட்டத்லத பற்றி எடுத்துலரக்க அவர்களுடன் ஒரு சந்திப்லப ஏற்பாடு செய்ய அனுமதித்துள்ளது. வசிர் எக்ஸ் உடன் தொடர்புடைய சொத்துக்களை பயனர்களுக்கு விநியோகிப்பதற்கும், தளத்தின் செயல்பாடுகளை மீட்டெடுக்கும் ஷெட்டாய் இன் முயற்சிகளில் இந்த முடிவு ஒரு குறிப்பிடத்தக்க படிநிலையாகும். மறுசீரமைப்பு செயல்முறையை மேற்கொள்ள தேவையான நேரத்தையும் சட்டப் பாதுகாப்பையும் வழங்குவதற்கு நீதிமன்றம் ஷெட்டாய் க்கு 16 வார கால அவகாசத்தை வழங்கியது. கூடுதலாக, திட்டத்தை எடுத்துரைக்கும் சந்திப்பின் செயல்முறையை மாற்றியமைக்கவும் ஷெட்டாய் நிறுவனத்திற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது,

இது செயல்முறையை நெறிப்படுத்தவும், திட்ட சந்திப்பில் அதிக பயனர்கள் பங்கேற்பதை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த செயல்முறை துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை என்று நீதிமன்றம் கண்டறிந்தது. மேலும், தவறான அல்லது தவறான நடத்தைக்கான முறையான அல்லது போதுமான ஆதாரங்கள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லல என்றும் சிதிமன்றம் குறிப்பிட்டது. ஷெட்டாய் சைபர் தாக்குதலைத் திட்டமிட்டதாக தளத்தின் சில பயனர்கள் கூறியதற்கு மாறாக இது நிகழ்ந்துள்ளது. சைபர் தாக்குதலுக்கு வட கொரிய லாசரஸ் குழுமம் தான் காரணம் என்று அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென் கொரியா அரசாங்கங்கள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்து, இந்தக் கண்ணோட்டம் ஒரு முக்கியமான நேரத்தில் வருகிறது. ஷெட்டாய் இன் விண்ணப்பத்திற்கு ஆட்சேபனை தெரிவித்த பல முதலீட்டாளர்கள் இருக்கலாம் என்றாலும், விண்ணப்பத்தை ஆதரிக்கும் ஆனால் அமைதியாக இருக்க முடிவு செய்த பயனர்கள் பெரும்பான்மையாக இருப்பதற்கான வாய்ப்பும் உள்ளது என்பதையும் நீதிமன்றம் கவனத்தில் கொண்டது. பயனர்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கும், தளத்தின் ணிட்டெடுப்பை கட்டமைக்கப்பட்ட சீரான முறையில் எளிதாக்கும் வகையில் ஒரு விளீவான மறுசீரமைப்பு திட்டத்தை பயனர்களுக்கு செயல்படுத்துவதற்கும் அதன் உறுதிப்பாட்டை வலியுறுத்த ஷெட்டாய் இந்த வாய்ப்பைப் பயன்படுத்த விரும்புகிறது.

# ரியல் எஸ்டேட் துறையுடன் வில்லா, அடுக்குமாடி கட்டுமான துறையில் நுழையும் ஜி ஸ்கொயர் நிறுவனம்

சென்னை, 30 ஜனவரி 2025: ரியல் எஸ்டேட் துறையில் தமிழ்நாட்டின் முன்னணி நிறுவனமாக திகழும் ஜி ஸ்கொயர் நிறுவனம், வில்லா மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுமான துறையில் நுழைவதாக அறிவித்துள்ளது. நகர்புறங்களில் விதிமுறைகளுக்கு உட்பட்டு முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட மற்றும் திட்டமிடப்பட்ட வீட்டு மனைகள் விற்பனை காரணமாக, இந்நிறுவனம் வாடிக்கையாளர்கள் இடையே தனக்கென ஒரு இடத்தை பிடித்துள்ளது. இந்த நிலையில் ஜி ஸ்கொயர் நிறுவனம் தற்போது தமிழ்நாடு, கர்னாடகா மற்றும் தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களில் பல்வேறு அடுக்குமாடி குடியிருப்புகளை கட்ட திட்டமிட்டுள்ளது. அதற்காக இந்நிறுவனம் 1000 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்ய இருப்பதாக அறிவித்துள்ளது.




இந்த முதலீட்டைக் கொண்டு வீட்டு மனைகள் விற்பனை மற்றும் மேம்பாட்டுடன் இம்மாநிலங்களில் உள்ள மக்களுக்கு பிரீமியம் தரத்தில் நவீன தொழில் நுட்பங்களுடன் கூடிய வில்லாக்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளை கட்டி விற்பனை செய்ய உள்ளது. நகர்புறங்களில் உள்ள இந்நிறுவனத்தின் வீட்டு மனைகள், புறநகர்ப் பகுதிகளில் பொதுவாக சிறிய அளவிலான வீட்டு மனை திட்டங்களை வழங்கும் இதன் போட்டியாளர்களிடம் இருந்து தனித்துவமிக்கதாக உள்ளது. வாடிக்கையாளர்கள் இடையே இந்நிறுவனத்திற்கு உள்ள நன்மதிப்பு காரணமாக தற்போது கட்டுமானத் துறையில் நுழைந்துள்ளது. இதன் கட்டுமான திட்டங்கள் மதிப்புமிக்கதாகவும், அதேசமயம் உத்தரவாதமான வருமானத்திற்கு உறுதி அளிப்பதாகவும் இருக்கும். இதன் காரணமாக வீட்டு உரிமையாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் இருவருக்கும் மிகுந்த பலன் கிடைக்கும்.

முக்கியமான இடங்களில் குறைந்த விலையில் வீட்டு மனைகளை விற்பனை செய்வதே ஜி ஸ்கொயர் வெற்றிக்கு முக்கிய காரணமாக உள்ளது. பெரிய இடங்களை வாங்கி அவற்றை சீரமைத்து விற்பனை செய்வதில கடந்த 12 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த அனுபவத்தை இந்நிறுவனம் பெற்றுள்ளது.

இந்த தனித்துவமான திறன், வீட்டு மனைகள் துறையில் இந்நிறுவனம் சிறந்து விளங்குவதற்கு முக்கிய காரணமாக உள்ளது. இப்போது, அதே நிபுணத்துவத்துடன் வில்லா மற்றும் அடுக்குமாடி குடியிருப்புப் பிரிவுகளிலும் கால் பதிக்கும் இந்நிறுவனம், குறைந்த விலையில் சிறந்த தரமான வீடுகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்க உள்ளது.

இது குறித்து ஜி ஸ்கொயர் ரியல்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் நிர்வாக இயக்குனர் பாலா ராமஜெயம் கூறுகையில், வளர்ச்சிப் பாதையின் அடுத்த கட்டத்திற்குள் நுழையும் இந்தத் தருணம் எங்கள் நிறுவனத்திற்கு மிகவும் பெருமையான தருணம் ஆகும். வீட்டு மனை விற்பனை சந்தையில் எங்களுக்கு கிடைத்துள்ள வெற்றியைத் தொடர்ந்து தற்போது வாடிக்கையாளர்களின் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் கட்டுமானத் துறையில் நுழைந்துள்ளோம், வாடிக்கையாளர்கள் அடுக்குமாடி குடியிருப்பு, வில்லா அல்லது மனைகளை வாங்க விரும்பினால், ஒவ்வொரு தனிநபருக்கும் அவர்களின் கனவு இல்லத்தை அவர்கள் விரும்பிய வடிவத்தில் வழங்குவதே எங்களின் முக்கிய குறிக்கோள் ஆகும். இந்த விரிவாக்கத்தின் மூலம் பெரிய நகரங்கள் மட்டுமல்லாமல் சிறு நகரங்களிலும் உள்ள மக்கள் தங்கள் கனவு இல்லங்களை எந்தவித தடையும் இல்லாமல் கட்டுவதற்கு நாங்கள் உறுதி அளிக்கிறோம். கட்டுமான திட்டத்திற்காக அடுத்த 2 ஆண்டுகளில் 1000 கோடி ரூபாய் முதலீடு செய்ய உள்ளோம் என்று தெரிவித்தார்.

பெரிய அல்லது சிறிய நகரங்கள் என எதுவாக இருந்தாலும் தாங்கள் கட்ட உள்ள அனைத்து திட்டங்களும், சிறந்த தரத்துடன் நவீன வசதிகளைக் கொண்டிருக்கும். மேலும் கட்டுமானத் திட்டங்களும் உயர் தரங்களைக் கொண்டிருக்கும், ஒவ்வொரு இடத்திலும் வாடிக்கையாளர்கள் மகிழ்ச்சியுடன் வாழ்வதற்கான அனைத்து வசதிகளும் இருக்கும் என்று ஜி ஸ்கொயர் உத்தரவாதம் அளித்துள்ளது.

சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, ஐதராபாத், மைசூர் உள்ளிட்ட பல்வேறு இடங்களில், ஜி ஸ்கொயர் ரியல் எஸ்டேட் துறையில் சிறந்து விளங்கி வருகிறது. சட்ட சிக்கல்கள் இல்லாமல் தரமான வீட்டு மனைகளை வழங்குவதன் காரணமாக வாடிக்கையாளர்களிடம் மிகுந்த நம்பிக்கை பெற்ற நிறுவனமாக உள்ளது.

இன்று வரை இந்நிறுவனம் மொத்தம் 127 திட்டங்களை நிறைவு செய்துள்ளது. 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மகிழ்ச்சியான வாடிக்கையாளர்களை கொண்டுள்ள இந்நிறுவனம் முக்கியமான இடங்களில் 4 ஆயிரம் ஏக்கர் நிலங்களை விற்பனை செய்துள்ளது. வில்லாக்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்பு திட்டங்களில் நுழைந்திருப்பது என்பது வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட ரியல் எஸ்டேட் தீர்வுகளை வழங்குவதில் இந்நிறுவனத்தின் அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்கு சான்றாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சென்னை மாநகரில் வானகரத்தில் தனது 3-வது புற்றுநோய் சிகிச்சை மையத்தை தொடங்கியிருக்கும் அப்போலோ ஹாஸ்பிட்டல்ஸ்

சென்னை, 30 ஜனவரி 2025: அப்போலோ ஹாஸ்பிட்டல்ஸ் சென்னை மாநகரில் அதன் 3-வது புற்றுநோய் சிகிச்சை மையத்தை பெருமிதத்துடன் இன்று தொடங்கி வைத்திருக்கிறது. வானகரத்தில் நிறுவப்பட்டுள்ள இந்த முழுமையான புற்றுநோய் சிகிச்சை மையம், தமிழ்நாடு அரசின் ஞாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்ப நலவாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்ரமணியன் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. சீரும் சிறப்புமாக நடைபெற்ற இத்திறப்பு விழா நிகழ்வில் தமிழ்நாடு அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலவாழ்வுத் துறையின் செயலரும், அரசின் கூடுதல் தலைமை செயலருமான திருமதி. சுப்ரியா சாஹு ஐஏஎஸ், அப்போலோ ஹாஸ்பிட்டல்ஸ் எண்டர்பிரைசஸ் லிமிடெட்-ன் (ஏஎச்இஎல்) நிறுவனர் & தலைவர் டாக்டர். பிரதாப் சி ரெட்டி, ஏஎச்இஎல்-ன் துணை தலைவர் டாக்டர். பிரீத்தா ரெட்டி, மற்றும் ஏஎச்இஎல்-ன் நிர்வாக இயக்குநர் மிஸ். சுனிதா ரெட்டி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தமிழ்நாடு அரசின் மாண்புமிகு சுகாதாரம் மற்றும் குடும்ப நலவாழ்வுத்துறை அமைச்சர் திரு. ஞா. சுப்ரமணியன் பேசுகையில், “தமிழ்நாட்டு மக்களுக்கு மேம்பட்ட புற்றுநோய் சிகிச்சையை வழங்குவதில் தொடர்ந்து சிறப்பான கூர்நோக்கத்தை தமிழ்நாடு அரசு கொண்டிருக்கிறது. இம்மாநிலத்திற்கு புத்தம்புதிய, புதுமையான தொழில்நுட்பங்களை தொடர்ந்து கொண்டுவந்து அதனை இந்தியாவெங்கிலும் மற்றும் உலகெங்கிலும் விரிவுபடுத்தும் பணியை அப்போலோ கேன்சர் சென்டர்ஸ் செய்துவருவது எங்களுக்கு பெருமகிழ்ச்சியளிக்கிறது. இந்தியாவில், புற்றுநோய்க்கான சிணீச்சை பராமரிப்பை புரட்சிகரமாக ஆக்குவதில் அப்போலோ கேன்சர் சென்டர்கள் மற்றும் அவர்களது குழுவினர் மேற்கொண்டுவரும் தளர்வில்லாத முயற்சிகளை நான் மனமாரப் பாராட்டுகிறேன். வானகரத்தில் நிறுவப்பட்டுள்ள அப்போலோ கேன்சர் சென்டரில் இப்போது தொடங்கியிருப்பது புற்றுநோய்க்கு எதிரான எமது ஒருங்கிணைந்த யுத்தத்தில் ஒரு முக்கிய மைல்கல் என்பதில் ஐயமில்லை,” என்று கூறினார்.

அப்போலோ ஹாஸ்பிட்டல்ஸ் எண்டர்பிரைசஸ் லிமிடெட்-ன் (ஏஎச்இஎல்) நிறுவனர் & தலைவர் டாக்டர். பிரதாப் சி ரெட்டி பேசுகையில், “இந்திய நாட்டின் மக்களுக்கு உலகத்தரத்திலான உடல்நல பராமரிப்பை வழங்குவதே அப்போலோ ஹாஸ்பிட்டல்ஸ் - இல் எங்களது குறிக்கோளாகவும், செயல்பாடாகவும் இருந்து வருகிறது.

இக்குறிக்கோளை அடைவதற்காக சமீபத்திய தொழில்நுட்பம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளில் முதலீடு செய்வதில் நாங்கள் வலுவான பொறுப்புறுதி கொண்டிருக்கிறோம். வானகரத்தில் எமது புதிய புற்றுநோய் சிகிச்சை மையத்தை தொடங்கியிருப்பது, சென்னை முழுவதிலும் மற்றும் சுற்றியுள்ள பிராந்தியங்களிலும் உள்ள மக்களுக்கு முதல்தர புற்றுநோய் சிகிச்சைக்கான அணுகுவசதியை கணிசமாக உயர்த்தும் புற்றுநோய் என்பது உயிரை அச்சுறுத்தும் ஒரு நோயாக இருப்பதை தடுத்து சமாளித்து வெள்ளக்கூடிய ஒரு பாதிப்பாக இருக்கும் ஒரு எதிர்காலத்தை உருவாக்குவது என்ற எமது தொலைநோக்கு திட்டத்திற்கு இணக்கமானதாக இந்த தொடக்கம் அமைந்திருக்கிறது. ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க கண்டுபிடிப்புகளில் முதலீடு செய்வதன் மூலம் எமது நோயாளிகளுக்கு சாத்தியமுள்ள சிறந்த சிகிச்சை பராமரிப்பை வழங்கி இந்த இலக்கை அடைவதை நோக்கி நாங்கள் ஊக்கத்தோடு தொடர்ந்து பயணிப்போம்” என்று கூறினார்.



தமிழ்நாடு அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நலவாழ்வுத் துறையின் செயலரும், அரசின் கூடுதல் தலைமை செயலருமான திருமதி. சுப்ரியா சாஹு ஐஏஎஸ் கூறியதாவது: “தொடங்கப்பட்டிருக்கும் இப்புதிய சிகிச்சை மையம், மக்கள் பெற்று பயனடைவதற்கு தகுதியுள்ள சிறப்பான சிணீச்சை அனைவருக்கும் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் மக்களுக்கு நெருக்கமாக தரமான சிணீச்சை பராமரிப்பை கொண்டுவந்து சேர்க்கும் என்று நான் நம்புகிறேன். புற்றுநோய் பாதிப்பிலிருந்து சிகிச்சையின் மூலம் குணமடைந்து அதிக ஆரோக்கியத்துடன் வாழும் ஒரு சமுதாயம் என்ற இலக்கை நோக்கிய பயணத்தை இதுவொரு முக்கியமான நடவடிக்கையாகும்.”

அப்போலோ ஹாஸ்பிட்டல்ஸ் எண்டர்பிரைசஸ் லிமிடெட்-ன் துணை தலைவர் டாக்டர். பிரீத்தா ரெட்டி இந்நிகழ்வின்போது உரையாற்றுகையில், “சிகிச்சை, புத்தாக்க செயல்பாடுகள் மற்றும் நோயாளிகளுக்கு கனிவான ஆதரவு ஆகியவற்றில் புதிய தரஅளவுகோல்களை நிறுவுவதன் வழியாக புற்றுநோய் சிகிச்சையில் இந்நாட்டிற்கே அப்போலோ ஹாஸ்பிட்டல்ஸ் தொடர்ந்து வழிகாட்டி வருகிறது.

தமிழ்நாட்டில் முதன்முறையாக எலெக்டா ஹார்மனி ப்ரோ கதிரியக்க சிகிச்சை தொழில்நுட்ப வசதியுடன் வானகரத்தில் அப்போலோ கேன்சர் சென்டர் யூடங்கப்பட்டிருப்பது இந்த பொறுப்புறுதிக்கு ஒரு நேர்த்தியான சான்றாகும். இந்த புதிய மையமானது, மேம்பட்ட நவீன புற்றுநோயியல் சிகிச்சை சேவைகளை இப்பிராந்திய மக்களுக்கு நெருக்கமாக கொண்டுவந்திருக்கிறது. இதனால் நோயாளிகளுக்கும், அவர்களை கவனித்துக் கொள்பவர்களுக்கும் பயண நேரம் குறைந்திருப்பதோடு அவர்களின் சவுகரியம் அதிகமாக்கப்பட்டிருக்கிறது. புற்றுநோய் சிணீச்சைக்கான எமது 23வது மையத்தின் தொடக்கமானது, உலகத்தரம் வாய்ந்த புற்றுநோய் சிகிச்சை ஒவ்வொரு நோயாளிக்கும் கிடைக்குமாறு வழங்குவதில் எங்களது நிலையான அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது,” என்று குறிப்பிட்டார்.

முழுமையான சிகிச்சையை வழங்கும் ஒரு தனித்து நிற்கும் பிரத்யேக மையமாக இது செயல்படும்என்பதே வானகரத்தில் அமைந்துள்ள அப்போலோ கேன்சர் சென்டரின் ஒரு முக்கிய அம்சமாகும். இம்மையமானது, மேம்பட்ட நோயறிதல் சேவைகளையும், அறுவைசிகிச்சை மற்றும் கதிர்வீச்சு புற்றுநோயியல் சேவைகளையும் வழங்கும். அத்துடன், ஆலோசகர்கள், உணவுமுறை நிபுணர்கள் மற்றும் பேச்சு சிகிச்சை வல்லுநர்கள் போன்ற தொடர்புடைய சிறப்பு மருத்துவ பணியாளர்களின் ஆதரவும் நோயாளிகளுக்கும் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களுக்கும் இங்கு வழங்கப்படும்.